2022 அக்டோபர் 17] [பேரவைத் தலைவர்]

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், சமாஜ்வாடி கட்சியினருக்கும், இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

முற்பகல் 10–10

(ஆ) திரு. சேடபட்டி இரா. முத்தையா, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் 21–9–2022 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

அன்புடன் பழகும் பண்பையும், அனைவரிடமும் எளிமையோடு பழகும் பாங்கையும் தன்னகத்தே கொண்ட திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் 1977–1980, 1980–1984, 1985–1988 மற்றும் 1991–1996 ஆகிய ஆண்டுகளில் சேடபட்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, 1991–1996 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராக சிறப்பாகப் பணியாற்றி அனைவரது பாராட்டுதலையும் பெற்றவர். மேலும், 1989–1991 மற்றும் 1998–1999 ஆகிய ஆண்டுகளில் பெரியகுளம் மக்களவைத் தொகுதி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1998 ஆம் ஆண்டில் ஒன்றிய அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

[பேரவைத் தலைவர்][*2022 அக்டோபர் 17*

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்பெறுகின்றன.

பேரவை மீண்டும் நாளை *(18–10–2022)*, செவ்வாய்க்கிழமை காலை *10–00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10–11 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS